பக்கங்கள் –12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 149

வியாழக்கிழமை
24 ஏப்ரல் 2025

சித்திரை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056






நீண்ட இழுபறிக்குப் பின்னர்

# செம்மணி அகழ்வுக்காக விடுவிக்கப்பட்டது நிதி!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

அரியாலை செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான நிதி, நிதியமைச்சால் விடுவிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. 11

## டான் பிரியசாத் கொலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

பொதுஜன பெரமுன வலியுறுத்து



கொழும்பு, ஏப். 24

டான் பிரியசாத் பாதாள குழு உறுப்பினர் அல்லர். எனவே, அவர் கொல்லப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அந்தக் கட்சி 10

உள்ளூராட்சித் தேர்தல்

## வடக்கு மாகாணத்தில் 114 முறைப்பாடுகள்!

யாழ்ப்பாணம், ஏப். 24

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் இதுவரை 107 தேர்தல் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் திணைக்கள பொறுப்பதிகாரிகள் தெரிவித் 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## தபால் வாக்களிப்புக்கு 21,064 பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 24

தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21 ஆயிரத்து 64 பேர் வாக்களிக்கவுள்ளனர். இதற்காக, 292 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். 11

## இணையக் குற்றவிசாரணைப்பிரிவு யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

அங்குரார்ப்பணம் செய்யவருகிறார் பதில் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணத்தில் நாளை இணையக் குற்றவிசாரணைப் பிரிவு ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. இதற்காக, பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வருகைதரவுள்ளார்.

வடக்குமாகாணத்தில் இணையக் குற்றங்கள் 11

## தபால்மூல வாக்களிப்பு இன்று!

கொழும்பு, ஏப். 24

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தபால் மூலமான வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமை 10

## மாணவனை மோதிவிட்டு தப்பியோடிய பெண்!

தீவிர தேடுதலில் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 24

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாக, பாடசாலை மாணவன் மீது மோட்டார்சைக்கிளால் மோதி விபத்தை ஏற்படுத்திய பெண், சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற 11



‘மற்றவை எக்கேடு கேட்டாலும் பரவாயில்லை எண்டு தப்பியோடுறது தான் இப்ப நாகரிகம் கண்டியளோ’

## 8 கிலோ தங்கம் மன்னாரில் மீட்பு!

இரு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 24

தலைமன்னார் பாக்குநீரிணையூடாக இலங்கைக்குக் கடத்தப்பட்ட 8 கிலோ 810 கிராம் தங்கக் கட்டிகள் கடற்படையால் 11

## அமைச்சர் பிமல் யாழ். வருகிறார்!



யாழ்ப்பாணம், ஏப். 24

அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்துக்கு நாளைமறுதினம் வருகைதரவுள் 11

மே 15ஆம் திகதிமுதல்

## ராமர்பால திட்டுகள்வரை சுற்றுலாவிகள் அனுமதி!

மன்னார், ஏப். 24

மன்னார் தலைமன்னார் பகுதியில், ராமர் பாலம் என்று அழைக்கப்படும் பகுதியின், மணற்திட்டுகள் வரை சுற்றுலாவிகள் செல்வதற்கு அனுமதி வழங் 11

## மூளையில் கிருமித்தொற்று; குடும்பத்தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துன்னாலை – குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த மணியம் ஜெகதீஸ்வரன் 11



## வட்டுவாகல் பாலப் புனரமைப்பு; பூர்வாங்க நடவடிக்கை ஆரம்பம்

முல்லைத்தீவு, ஏப்.24

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட்டுவாகல் பாலம் புனரமைப்புக்கான வரைபடம் உள்ளிட்ட 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4052
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 11 16 43 44
விசேட எழுத்து: F

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1119
வெற்றி இலக்கம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 02 09 39 47

**NLB ஜய**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0078
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 2 6 7 1

**மெகா பவர்**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2158
ஆங்கில எழுத்து: V
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 21 27 29 34

**மஹஜன சம்பத**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5810
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 6 0 4 2 2 8

**தன நிதானய**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1840
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 29 33 74 82
விசேட எழுத்து: M

**அத சம்பத**
திகதி: 23.04.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0385
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 4 2 2 8

# ஜனநாயகத்தைப் படுகொலைசெய்தே உள்ளாட்சித் தேர்தல் இடம்பெறுகிறது

## சட்டத்தரணி மணிவண்ணன் விமர்சனம்

**யாழ்ப்பாணம், ஏப். 24**

**ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டே, உள்ளூராட்சித் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தவுள்ளது என்று சட்டத்தரணியும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் மேயருமான வி.மணிவண்ணன் விமர்சித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் போட்டியிடுகின்றது. அதில் யாழ், மாநகரசபை உள்ளிட்ட நான்கு உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பெண் வேட்பாளர் ஒருவரின் சத்தியப்பிரமாணத்தில், சத்தியப்பிரமான ஆணையாளரின் ஒப்பம் இல்லை, இளம் வேட்பாளர்களுக்காகச்சமர்ப்பிக்கப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரங்களில் ஒப்பம் இல்லை உள்ளிட்ட காரணங்களுக்காகவே எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உச்சநீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தோம். உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஒரு காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை வழங்கினால், அதே காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் கடப்பாடு. இங்கே தேர்தல் ஆணைக்குழு நீதியாக, நேர்மையாக, ஜனநாயக ரீதியாக சுயாதீனமாகச் செயற்படுகின்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. - என்றார். (ம-26,125,20)

**சுபிரி தன சம்பத**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0518
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கம்: 6 4 9 3 5 6

**Super Ball**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2784
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கம்: 14 41 49 63

**சனிதா**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கம்: 03 23 27 28
வெற்றி வாரம்: 4945

**லக்ன ராசி**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
துலாம்
வெற்றி இலக்கம்: 08 09 15 56
சீட்டிழுப்பு வாரம்: 4496

**KAPRUKA**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: H
சுப்பர் இலக்கம்: 25
வெற்றி இலக்கம்: 16 30 47 53
வெற்றி வாரம்: 1960

**அத கோடிபதி**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கம்: 03 25 29 48
வெற்றி வாரம்: 2610

**JAYODA**
திகதி: 23.04.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கம்: 15 34 35 64
வெற்றி வாரம்: 2121



## டான் பிரியசாத் உயிரிழப்பு உறுதிப்படுத்தியது பொலிஸ்

கொழும்பு, ஏப்.24

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினர் டான் பிரியசாத், கொழும்பு தேசிய மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மீதொட்டமுல்லவில் உள்ள லக்சந்த செவன அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள அவரது வீட்டில் வைத்து டொன் பிரியசாத் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருந்தது. அதில் படுகாயமடைந்த அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இரவு 9.10 மணியளவில் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்குப் பிஸ்டல் ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. டான் பிரியசாத் உயிரிழந்துவிட்டார் என்று நேற்றுமுன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தநிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான டான் பிரியசாத் உயிரிழக்கவில்லை என்றும், ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார் என்றும் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்தநிலையில், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த டான் பிரியசாத் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்றுக் காலை உறுதிப்படுத்தியது. (எ-இ)

## மீண்டும் மலேரியா மக்கள் அவதானம்

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் மலேரியா மீண்டும் அதிகரித்துவருவதாகவும், இது சமீபத்தில் வெளிநாடுகளில் இருந்து திரும்பிய நபர்களிடமிருந்து கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மலேரியா மீண்டும் வருவதைத் தடுக்க இலங்கை ஒரு வலுவான திட்டத்தைப் பராமரித்து வருகிறது. இலங்கையில், 2023 ஆம் ஆண்டில் 62 மலேரியா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதுடன் ஒரு மரணம் நிகழ்ந்தது. 2024 ஆம் ஆண்டில் 38பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில் ஒரு மரணம் பதிவாகியது. 2025 இல் இதுவரை 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### கிளிநொச்சியில்

## காணிகளைக் கையளிக்க படையினர் ஆயத்தப்பணி

கிளிநொச்சி, ஏப். 24

கிளிநொச்சி மாவட்டத்தில் விடுவிக்கப்படவுள்ள காணிகளிலிருந்து படையினர் தமது முகாமை அகற்றும் பணிகளை முன்னெடுத்துள்ளனர் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் முட்கொம்பன், கிராஞ்சி ஆகிய இடங்களிலும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் வட்டக்கச்சியிலும் பளைப் பிரதேச செயலர் பிரிவிலும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

இந்தநிலையில் படையினர் அதற்குரிய முன்நகர்வுகளை ஆரம்பித்துள்ளனர் ஒரு வாரகாலப்பகுதிக்கு அந்தப் பணிகள் நிறைவடையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை சுமார் 70 ஏக்கர் வரை கிளிநொச்சியில் காணி விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

## மாத்தறைச் சிறைச்சாலையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, ஏப்.24

மாத்தறை சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் உள்ள இரு கைதிகள் குழுவுக்கு இடையே மோதல் ஏற்பட்டிருந்தது. அதைக் கட்டுப்படுத்துவதற்காக சிறைச்சாலை அதிகாரிகள் வானத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன், கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலையும் நடத்தினர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விசேட அதிரடிப்படையையும் அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாத்தறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கைதியை வேறொரு சிறைக்கு அழைத்துச்செல்ல முயன்றபோது இந்தப் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

ஒரு கூண்டில் இருந்து வெளியே வந்த சுமார் 500 கைதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், அமைதியின்மையுடன் நடந்துகொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்கள் படுகொலைகள்; நீதி வழங்க அரசாங்கம் பின்னிற்பு!

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு




**யாழ்ப்பாணம், ஏப்.24**

**ஊடகவியலாளர்களின் படுகொலைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பித்தபோதிலும் அதற்கான நீதியை நிலைநாட்டுவதில் அநுர அரசு பின்னிற்கின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

ஊடகசந்திப்பொன்றைநேற்று முன்தினம் நடத்தி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களைக் கையாள்வதற்கு அநுர அரசாங்கத்துக்கு நேரமில்லையா? பதவிக்கு வந்தவுடன் எக்னெலிகொட, லசந்த உட்பட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி பெற்றுத்தருவேன், பாதிக்கப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு நீதியை வழங்குவேன் என்று வாக்குறுதியளித்திருந்தார்.

சுகிர்தரா ஜன், நிமலராஜன், சிவராம், நிலக்சன் என அனைத்துத் தமிழ் ஊடகவியலாளர்களதும் நீதி நிலைநாட்டப்படவேண்டும். நான் என்னுடைய கையால் எனது ஊடக நிறுவனத்துக்கு எதிராக இடம்பெற்ற 40 சம்பவங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். எனினும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை- என்றார். (ச-125)

# உரமானியத்துக்கு நிதி விடுவிப்பு

கொழும்பு, ஏப். 24

சிறுபோகத்துக்காக 9 மாவட்டங்களின் விவசாயிகளுக்குத் தேவையான உரமானிய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு 25,000 ரூபா படி, தலா 2 ஏக்கருக்கு உரமானியம் வழங்கப்படவுள்ளது. சிறுபோகத்துக்கான உரமானியத்துக்கு 157 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# வாழ்த்து சொல்லாததால் 98 மில். ரூபா சேமிப்பு

கொழும்பு, ஏப்.24

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு குறுஞ்செய்தியை மக்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பாததன் மூலம் அரசாங்கம் 98 மில்லியன் ரூபாவை சேமித்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்தி கோட்டஹச்சி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:-

முந்தைய ஆட்சிகளில் புத்தாண்டுக்கு குறுஞ்செய்தி அனுப்பும் நடைமுறை இருந்தபோதும், இந்த வருடம் ஜனாதிபதி புத்தாண்டுக் குறுஞ்செய்தியை அனுப்பவில்லை. அதனால் நாடோ அல்லது கட்சி உறுப்பினர்களோ எந்தப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை. இந்த நடவடிக்கையால் அரசாங்கம் நிதியைச் சேமித்துள்ளது - என்றார். (எ-இ)

# கசிப்புடன் ஒருவர் கைது!

வவுனியா, ஏப்.24

வவுனியா வாரிக்குட்டியூரில் 30 போத்தல்கள் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டியில் 48 வயதுடைய நபரை பூவரசங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த பகுதியில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டுவருவதாகக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றை சோதனை செய்தபோதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச-25,110)

யாழ் மாநகரசபைத் தேர்தல் 2025
2ம்வட்டாரம்
கந்தர்மடம் வடமேற்கு J/100, 102, 123(பகுதி)



இராசநாயகம்
ரவிசங்கரன்
சட்டத்துறை மாணவன்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சங்கரப்பிள்ளை
சிவலோகேசன்
பிரபல தொழிலதிபர்,
செயலாளர், யாழ் வணிகர் கழகம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசியப் பேரவை




"அநுர வந்தால் திறக்குமாம், அடுத்த கிழமையே மூடுமாம். அது என்ன?" இந்தநொடிக்கு எல்லாருக்குமே விடை தெரிஞ்சிருக்கும். வேறயென்ன, உந்த எழுதுமட்டுவாழ், ஆனையிறவு சோதனைச்சாவடியள் எண்டதுதான் உந்த நொடிக்கு விடை. எப்பவெல்லாம் யாழ்ப்பாணத்துக்கு அநுர வாறாரோ அப்பவெல்லாம் "சனத்துக்கு இடைஞ்சலா ஏன் இந்தச் சோதனைச் சாவடியள்? உதுகள்தான் பிறகு அவையின்ர மனசில தாங்கள் வேற நாடு எண்ட எண்ணத்தைக் கொண்டுவரும்" எண்டு ஆமிக்கார பெரியவைக்கு கடுமையாப் பேசுறவராம். ஆமிக்கார பெரியவையும் "ஓம் சேர், இப்பவே உதுகளை எடுக்கிறம்" எண்டு பவ்வியமாப் பதில் சொல்லுவினம். அடுத்தநாளே சொன்னமாதிரி எழுதுமட்டுவாழிலையும், ஆனையிறவிலையும் இருக்கிற இரும்புக்கேடர்கள் எல்லாத்தையும் தூக்கி ஓரமா வைச்சிட்டு ஆமிக்காரர் உள்ளுக்க போய் குந்தியிருப்பினம்.

ஆனால் எவ்வளவுநாள்தான் அவையும் சும்மாவே இருப்பினம்? ஆடின காலும், பாடின வாயும், செக் பண்ணின ஆமியும் சும்மா இருக்கமுடியாதே. அதால மெல்லமெல்ல அதால போறவையை இடைக்கிடை மறிச்சு, ஐடெண்டி காார்ட் பாக்கிறது, போதைப்பொருள் கடத்துகினமோ எண்டு சீற்றைக் கழட்டிப் பாக்கிறத்கு எண்டு செக்கிங்கை தொடங்குவினம். பிறகு அங்கால ஓரமாப் போட்டிருந்த கேடர்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொண்டாக் கொண்டந்து வைப்பினம். ஒரு மாதத்துக்குள்ள பழையபடி சோதனைச்சாவடியில கட்டாயமா எல்லாரும் வளைஞ்சு நெளிஞ்சுதான் வாகனங்களை ஓடவேணும். ரண்டு பக்கத்தாலையும் வளைஞ்சு நெளிஞ்சு வரேக்க, இடைக்குள்ள வாகனங்கள் நேருக்கு நேரா முட்டுப்படுறதும் உண்டு., ஆனால் அதையெல்லாம் அங்க நிக்கிற ஆமிக்காரர் ஒழுங்குபடுத்தமாட்டினம். கேடர் வைக்கிறதும், இடைக்கிடை ஆக்களை நிப்பாட்டிச் செக் பண்றதும் தான் அவையின்ர வேலை. இப்பிடிச் சோதனைச் சாவடியளை வைச்சு, ஒரு துரும்பைக்கூட இவையள் பிடிச்சதுமில்லை. சனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு போகோணும் எண்ட ஒரேகாரணத்துக்காகத்தான் உந்தச் சாவடியளை வைச்சிருக்கினம்.

ஜனாதிபதியா வெண்ட உடனை யாழ்ப்பாணத்துக்கு அநுர தரைவழியா வாகனத்தில வரேக்கதான் இந்தச் சோதனைச்சாவடியளைக் கண்டிட்டு, உடனடியா அதை எடுக்கச்சொன்னவர். அவர் சொன்னதுக்காக வேண்டாவெறுப்பா கொஞ்சநாள் சோதனைச் சாவடியளை தூக்கின ஆமிக்காரர், பிறகு கொஞ்ச நாளிலையே பழையபடி போட்டிட்டினம். இப்ப திரும்பவும் அநுர யாழ்ப்பாணம் வந்தவர். அப்பதான் தான் தூக்கச்சொன்ன சோதனைச்சாவடியள் திரும்ப வும் முளைச்சிருக்கிறதைப் பார்த்திட்டு ஆமிப்பெரியவைப் பார்த்து முறைச்சவராம். "என்ர சொல்லுக்கு இதுதானோ மரியாதை?" எண்டதுதான் அந்தப் பார்வையின்ர அர்த்தம். இப்ப திரும்ப சோதனைச் சாவடியளை நிப்பாட்டிப் போட்டினம். கேடர்களையும் தூக்கிட்டினம். விக்கிரமாதித்தன் கதையில வாற வேதாளம் கடைசியில ஓடிப்போய் முருங்கையில ஏறுற மாதிரி, உவையளும் எப்ப திரும்ப முருங்கை மரத்தில ஏறி சோதனைச்சாவடியளை முளைக்கப்பண்ணப்போயினம் எண்டு பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹைதராபாத்தை துவம்சம் செய்து முதல் 4 இடங்களுள் நுழைந்தது மும்பை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், ஹைதராபாத்தைத் தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களுக்குள் நுழைந்தது மும்பை.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஹைதராபாத்தின் ஆரம்ப வீரர்களாக ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா இருவரும் களமிறங்கினார்கள். ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் ஹெட். இஷான் கிஷான் 1, அபிஷேக் சர்மா 8, நிதிஸ் குமார் ரெட்டி 2 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க 13 ஓட்டங்களில் நான்கு விக்கெட்களை இழந்தது ஹைரதாபாத்.

கிளாசன் மற்றும் மனோகர் இருவரும் இணைந்து இணைப்பாட்டத்தைக் கட்டமைக்க, பெரும் சரிவிலிருந்து மீண்டது ஹைதராபாத். அரைச்சதம் கடந்த கிளாசன் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழுந்தார். மனோகர் 43 ஓட்டங்களைகளுடன் பவிலியன் திரும்ப முடிவில் 143 ஓட்டங்களைப் பெற்றது ஹைதராபாத்.

பந்துவீச்சில் போல்ட் 4 விக்கெட்க ளையும், தீபக் சாகர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணிக்கு ரிகில்டன் 11 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும், ரோகித் சர்மா அபாரமாக விளையாடி அணியைப் பலப்படுத்தினார். அவர் 70 ஓட்டங்களைப் பெற்றார். சூரியகுமார் யாதவ் 19 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற முடிவில் 26 பந்துகள் மீதமிருக்க 7 விக்கெட்டுக்களால் வென்றது மும்பை.

இந்த வெற்றியைத் தொடர்ந்து, புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது மும்பை. (ம)


## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee and The Chairman, Divisional Procurement Committee on behalf of the Secretary, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing / Purchasing Period | | | From 24.04.2025 until 07.05.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 30.04.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 08.05.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | MA/NP/MU/MEPS/2025/LAR/01 | Renovation of Pandiyankulam 1st Lane | PSDG Fund | 2.20 | 77 | C9 & C8 (Highway) | 2,000.00 | 23-July 2025 | 33,000.00 | 19-Aug-2025 |
| 02 | PSDG/NP/MU/MEPS/2025/LAR/01 | Construction of Pandiyankulam Market Road | PSDG Fund | 14.16 | 84 | C6 & C7 (Highway) | 2,000.00 | 30-July-2025 | 212,400.00 | 26-Aug-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P:021 228 3475, e.mail: manthaieastps1@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Local Authority Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyan kulam, Naddankandal on or before 10.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Local Authority Procurement Committee & Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam, 24.04.2025

(CP44830) J-1







# போதைக்கு அடிமையானவர் புனர்வாழ்வு மையத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப். 24

ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவரை கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை 15 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின்படி, அவர் ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரியவந்ததை அடுத்து, அந்த இளைஞரைக் கந்தகாடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (எ-25,125)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 . 01 . 1947



மறைவு 22 . 04 . 2025

எமது தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத
ஸ்ரீஞானவைரவர் ஆலய முன்னாள்
பரிபாலன சபை உறுப்பினர்

**அமரர் வேலுப்பிள்ளை பேரம்பலம்**

அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை**

(CS/3018) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அப்பாவித்தனமாக இருப்பது மனதுக்கு மட்டுமே நல்லது. மூளைக்கு அது நல்லதல்ல.

– அனடோல் பிரான்ஸ் –

# இறந்துபோன வழக்குகள்!

ராஜபக்ச அணியைச் சேர்ந்தவரும், கடும்போக்கு இனவாத அரசியலை முன்னெடுத்தவருமான டான் பிரியசாத், சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான அவர், அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை உயிரிழந்துள்ளாரென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எந்தவொரு மனிதனுடைய இறப்பும் கொண்டாடப்படக்கூடியதல்ல. ஆனால், டான் பிரியசாத்தின் மறைவை முன்னிட்டு, சமூக வெளியெங்கும் முன்வைக்கப்படும் கருத்துகள், 'ஒரு மனிதன் எப்படி வாழக்கூடாது' என்பதற்கு இலக்கணமாக அவர் வாழ்ந்து சென்றிருக்கின்றார் என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அது ஒருபுறம் இருக்கட்டும்.ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதிகளில் ஒன்று, தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே. ஆனால், அந்த வாக்குறுதிக்கும் ஆளும் தரப்புக்கும் இடையில் கிஞ்சித்தும் தொடர்பில்லை என்பதைத்தான் அண்மைக் காலமாக இலங்கையில் இடம்பெற்றுவரும் துப்பாக்கிச் சூடுகள் மெய்ப்பிக்கின்றன. இவ்வளவு ஏன்? நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மூன்று துப்பாக்கிச்சூடுகள் தென்னிலங்கையில் பதிவாகியிருக்கின்றன. அவற்றில் ஒன்றே டான் பிரியசாத்தின் உயிரைப் பறித்திருக்கின்றது. உண்மையில், இலங்கையில் உளவுத்துறை தற்போதும் உயிர்ப்புடன் உள்ளதுதானா? என்று கேட்கவேண்டிய நிலையில் நாடு நகர்ந்துசெல்கின்றது.

டான் பிரியசாத் என்பவர் பல வழக்குகளின் ஆரம்பப் புள்ளி. 2019ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற பெரும் வன்முறைகளின் காரணகர்த்தா, அரகலயப் போராட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு (போராட்டக்காரர்கள் மீதான மே 9 தாக்குதல்) சூத்திரதாரி, முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்புகள் மற்றும் 1983ஆம் ஆண்டுக் கலவரங்களில் இறந்தோருக்கான அஞ்சலிகள் ஆகியவற்றைக் குழப்பியடிக்கும் பிரதான செயற்பாட்டாளர், போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் என்பவற்றின் பெரும்புள்ளி. எனவே, டான் பிரசாத் மீதான கவனத்தை அரசு நிச்சயம் செலுத்தியிருக்கவேண்டும்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்கும், குற்றச்செயல்களுக்கும் நீதி வழங்குவோம் என்று மீண்டும் மீண்டும் அநுர அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கின்றது. குற்றங்களை விசாரிக்கும்போது, அந்த விடயங்கள் அனைத்தையும் அறிந்த ஆரம்பப் புள்ளிகள் அல்லது பிரதான செயற்பாட்டாளர்கள் திரைமறை கரங்களால் நிச்சயம் இலக்குவைக்கப்படுவார்கள். சமூகவிரோதிகளின் நியதி அது. இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் உள்ளனர், அரசியல் பின்னணி உள்ளது என்று கூறிக்கொள்ளும் அநுர அரசாங்கத்துக்கு, அத்தகைய விசாரணைகளுக்குத் தேவையானவர்களைப் பாதுகாக்கத் தெரியாதா?

இப்போது டான் பிரியசாத் இறந்துவிட்டார். இனவாதத்தில் ஊறித்திளைத்த பெருச்சாளிகளால் அவர் தியாகியாக மாற்றப்படுவார். அவர் தொடர்பான குற்றப் பின்னணிகள் அனைத்தும் தியாகத்தின் வடிவங்களாக மாற்றப்படும். பிள்ளையானுக்காகக் குத்தி முறியும் 'பெருந்தகைகள்' நிச்சயம் இவை அனைத்தையும் நிறைவேற்றியே தீருவர். ஆனால், டான் பிரியசாத் மட்டும் இறக்கவில்லை. அவருடன் பல வழக்குகளும் இறந்துவிட்டன என்பதே உண்மை.




# இன்சுலினுக்கு தட்டுப்பாடில்லை



## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

அடுத்த நான்கு மாதங்களுக்குத் தேவையான இன்சுலின் இருப்பு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை நாட்டில் தேவையான இன்சுலின் இருப்பில் உள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொதுமக்கள் அநாவசிய பயத்தை ஏற்படுத்தவேண்டாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்க, நான்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தேவையான மருந்து இருப்பைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் சில மருந்துகளுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்பட்டது. விநியோகஸ்தர்களின் பலவீனங்கள் இதற்கு ஒரு காரணமாக இருந்தது. இதைத் தவிர்க்க, பல நாடுகளுடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன - என்றார். (ச-இ)

# பதவிவிலகல்

கொழும்பு, ஏப். 24

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தனது பதவியில் இருந்து திடீரென விலகியுள்ளார். இதனையடுத்து அவரின் பதவிக்கு, வடமேற்கு மாகாண சபையின் சாலை, போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் கட்டுமானத் தொழில்கள் அமைச்சகத்தின் செயலாளராக பணியாற்றி வரும் கமல் அமரசிங்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.


அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கீழுள்ள திணைக்களங்களின் உயரதிகாரிகள் தொடர்ச்சியாகப் பதவி விலகிவருகின்ற நிலையில், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரும் பதவி விலகியுள்ளார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது. (ச-25,சி)

# பங்குச்சந்தை தொடர் சரிவு!

கொழும்பு, ஏப். 24

கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்ணும் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 43.75 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும், கொழும்பு பங்குச்சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்றுமுன்தினம் 991 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)



# தேர்தலுக்கு 'இ-சேவை'

கொழும்பு, ஏப். 24

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்கள் தபால் மூல வாக்களிப்புத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளுவதற்கு ஒருநாள் 'இ-சேவை' அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் வாக்களிப்புப் பற்றிய விரிவான தகவல்களை வழங்கும் இந்தச்சேவையை eservices.elections.gov.lk ஐ பார்வையிடுவதன் மூலம் அணுகலாம் என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)

# வத்திக்கானுக்கு பேராயர் மல்கம்

கொழும்பு, ஏப். 24


கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். நித்திய இளைப்பாறிய பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸின் இறுதிச்சடங்குகளில் பங்கேற்பதற்காக அவர் வத்திக்கானுக்குச் சென்றுள்ளார். (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை -சித்திரை 12
25.04.2025
சுப நேரம் : 06.00 - 07.30
ராகுகாலம் : 10.30 - 12.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08 . 02 . 1939

மறைவு 18 . 04 . 2025

**வைத்தியலிங்கம் தம்பி சிவலிங்கம்**

பிரபல சட்டத்தரணி

எமது ஸ்தாபனத்தின் சட்டத்தரணியும்,
எமது உற்ற நண்பருமாகிய பிரபல சட்டத்தரணி
V.T. சிவலிங்கம் அவர்கள் திடீர் மறைவினை இட்டு
துயரிற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களை தெருவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

சாரங்கா நகைமாடம்
உரிமையாளர், ஊழியர்கள்.

(CS/58055) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 11 . 1938

மறைவு 21 . 04 . 2025

**ஞானம்மா பாலேந்திரா**

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம்மா பாலேந்திரா அவர்கள் கடந்த (21.04.2025) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை மேரிதிரேசா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்ஸ் சவரிமுத்து - சபீனா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலேந்திராவின் அன்பு மனைவியும், மீரா, கயசிந்நீலா, ஜொணதன், கீத்தா, அனுதா ஆகியோரின் அன்புத் தாயாரும், லங்காதரன், பாஸ்கரன், சுபாஷினி, யூலியன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராயப்பு, அன்ரனிப்பிள்ளை, மரியம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும், கிறிஷானா - லக்ஷன், அந்தியா, டானியல், பியங்கா, ஜியானா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2025) வியாழக்கிழமை இல. 8, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நாளை (25.04.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

இல. 8, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (CS/58051) J-1

077 361 3100, 021 222 6327

# முட்டை விலை சடுதியாக சரிவு

சந்தையில் முட்டை விலை சடுதியாக குறைவடைந்துள்ளதாக நுகர்வோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 23 ரூபா முதல் 29 ரூபா வரை முட்டை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பண்டிகை காலத்தில் முட்டைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது முட்டைக்கான தேவை குறைவடைந்துள்ளதால், முட்டை விலை குறைவடைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## வெதுப்பகம் வாடகைக்கு வழங்குதல்

வவுனியா உளுக்குளம் பிரதேசத்தில் உள்ள வெதுப்பகம் வாடகைக்கு விடப்பட உள்ளது.

கேள்வி கோரல்கள் 2025.05.23 ம் திகதிக்கு முன் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**தலைவர்**
**வவுனியா தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வ/து**
**புகையிரத நிலைய வீதி,**
**வவுனியா.**
024 222 2308

(CR/58054) J-1

## புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் பரிபாலன சபை

**பதவி :- நிர்வாக உத்தியோகத்தர்**

பரிபாலன சபையின் வழிகாட்டலுடன் ஆலயத்தின் நாளாந்த செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தேவை. இப்பதவிக்கு புங்குடுதீவு, நயினாதீவு, வேலணைக் கிராமத்தினை வசிப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஓய்வுபெற்ற அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. நாளாந்த கடமைகள் மற்றும் ஊதியம் தொடர்பாக பரிபாலன சபையினரால் தெரியப்படுத்தப்படும். கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு தமது விண்ணப்பத்தினை 30.04.2025 திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி :**
**திரு. ச. தனபாலசிங்கம்**
**தலைவர்**
**154/4 ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
076 803 5067

**ச. சண்முகானந்தன்**
**செயலாளர்**
077 031 0655

(CS/58053) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம்**

அவர்களின் 31ம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் (26.04.2025) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (36, மாட்டின் வீதி) நடைபெறும். அன்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நினைவுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்'படும். இத் திருப்பலியில் கலந்து கொண்டு அமரர் ஆன் சுமங்கலாவின் ஆன்மா இளைப்பாற்றிற்கான பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து அன்னாரில் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராமதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**36, மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/30076) J-1

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தின்
# காற்றுமாசு ஆய்வறிக்கை ஜூலையில் சமர்ப்பிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணத்தில் காற்றின் வளித்தரச் சுட்டெண் தொடர்பில் ஆராயப்பட்ட ஆய்வு அறிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கடந்தவருட இறுதியில் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல்வேறு பகுதிகளின் காற்றின் தரம் குறித்து தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பன இணைந்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய காற்றின் தரத்தை சோதனைக்குட்படுத்தின.

சோதனை நடவடிக்கைகளுக்காக 15 உணரிகள் யாழ்.மாவட்டத்தில் பொருத்தப்பட்டன. 10 உணரிகள் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினாலும் 5 உணரிகள் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையினாலும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் பொருத்தப்பட்டு காற்றின் தரம் சோதனை செய்யப்பட்டது.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி காற்றின் வளித்தரச் சுட்டெண் அதிகளவு மாசடைவைக் காட்டியது. தற்பொழுது அது குறைவடைந்துள்ளது. இந்தியாவின் காற்று மாசடைவு பருவகாலத்திற்கு ஏற்ப இலங்கையில் காற்றின் மாசினை அதிகளவு ஏற்படுத்தியது என ஆய்வின்போது குறிப்பிடப்பட்டது.

அதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் பொருத்தப்பட்ட 10 உணரிகள் ஆய்வில் இருந்து விலகப்பட்டுள்ளன.

இந்நிலையில் மருதங்கேணி , வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் உட்பட ஐந்து இடங்களில் கண்காணிப்புக்காகப் பொருத்தப்பட்ட ஏனைய ஐந்து உணரிகளின் தரவுகள் எதிர்வரும் ஜூலை மாதம்வரை கணிக்கப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக காற்றின் தரச் சுட்டெண்ணை அறியும் பொறிமுறைக்குப் பதிலாக நிரந்தரமாக குறித்த உணரிகளைப் பொருத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவான வழிவகைகளை அடுத்த வழக்குத் தவணையில் சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-125)

# சட்டவிரோத மீன்பிடி இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்த இருவர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்குக் கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணிக் கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுவரும் நிலையில் சந்தேகநபர்கள் இருவர் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-27)

# பொலிஸாரின் பணி மக்களைப் பாதுகாப்பதே

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப். 24

பொதுமக்களின் பாதுகாப்புக்கே பொலிஸார் உள்ளனர். அதனைப் பயன்படுத்தி அட்டூழியங்கள் செய்வதற்கு எந்தவித சமரசமும் கிடையாது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தீர்க்கப்படவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கடந்த காலங்களில் பொலிஸாரால் பல்வேறு முறைகேடுகள், துஷ்ரயோகங்கள் இடம்பெற்றன. எமது அரசாங்கம் வந்ததன் பின்னர் கணிசமான அளவு அவற்றை குறைத்துள்ளோம். எதிர்காலத்தில் முழுமையாக அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்- என்றார். (ச-110)

# விசுவாவசு
# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025






## தன்னம்பிக்கை துளிர்விடும்

மகர ராசிக்காரர்களுக்கு,

சொன்ன சொல் தவறாத நீங்கள், தவறு செய்தவர்களுக்கு ஒருபோதும் தயவு தாட்சண்யம் காட்டாதவர்கள். உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் நேர்மறை எண்ணங்களால் சாதிப்பீர்கள். புதிய பொறுப்புகள், அதிகாரங்கள் தேடிவரும்.

பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் அடிக்கடி வெளியில் கடன் வாங்கவேண்டிய சூழல் உருவாகும். விரயச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. சகோதர சகோதரிகளிடம் இருந்துவந்த மனஸ்தாபங்கள் விலகும். குடும்பத்தில் இனி குதூகலம் தான். குழந்தை வரம் வேண்டியவர்களுக்கு, இனி வாரிசு உருவாகும். நீங்கள் எதிர்பார்த்தபடி உங்கள் வீட்டுப் பெண்களுக்கு நல்ல துணை அமையும். பல நாள்களாக பேச்சுவார்த்தை நடத்தி, முடியாமல் இருந்த திருமணம் கைகூடும். சொந்தபந்தங்கள் வியக்கும்படி திருமணத்தை முடிப்பீர்கள். மகனுக்கும் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

எதையும் முதல் முயற்சியிலேயே முடித்துக்காட்டுவீர்கள். தாழ்வு மனப்பான்மை நீங்கி தன்னம்பிக்கை துளிர்விடும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

ஒவ்வொரு நாளும் ஏதேனும் பிரச்சினை வந்தாலும் அதைச் சமாளிக்கும் பக்குவத்தையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளுங்கள். எதையும் பக்குவமாகப் பேசி சமாளிப்பதே புத்திசாலித்தனம். மே 18 ஆம் திகதி ராகு கேதுப் பெயர்ச்சி நிகழ்வதால் முன்கோபத்தைத் தவிர்க்கவேண்டும். வராது என்று நினைத்த பணம் வந்துசேரும் உடல் ஆரோக்கியம் மேம்படும். சமையலறைக்கு தேவையான சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள் வீட்டில் இருந்தபடியே தையல், கைவினை பொருட்கள் தயாரிப்பு என்று பயிற்சி எடுத்துக் கொள்ளவும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும்.

கூடிய விரைவில் கெட்டிமேளச் சத்தம் கேட்கும். காதல் விவகாரங்களில் மாட்டிக் கொள்ளாமல் வீட்டில் பார்க்கும் வரனை ஏற்றுக் கொள்ளுங்கள். பணியில் இருந்தபடியே மேற்படிப்பு படிக்க முயற்சிக்கும் பெண்களுக்கு இது சாதகமான காலம். உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுங்கள். அலட்சியம், சோம்பல் நீங்கி படிப்பில் ஆர்வம் பிறக்கும். பெற்றோரின் பேச்சுக்கு மதிப்பளிப்பீர்கள்.

வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலில் நிம்மதி உண்டு. கடையை நவீனமயமாக்குவீர்கள். திடீர் இலாபம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் பல நாள்களாக இழுபறியாக இருந்த பதவி உயர்வு கிடைக்கும். சம்பள பாக்கியும் உடனே கிடைக்கும். சிலருக்கு அதிக சம்பளத்துடன் கூடிய புதுவேலை அமையும். அநாவசியமாக பேசிக்கொண்டிருக்க வேண்டாம். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது நல்லது. கலைத்துறையினருக்கு புதுப் புதுவாய்ப்புகள் தேடிவரும்.


**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு, சவால்கள் நிறைந்ததாகவும், சாமர்த்தியத்தைக் கற்றுத் தருவதாகவும் அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 . 07 . 1945

விண்ணில் 05 . 05 . 2024



### வேல் முருகேசு பத்மநாதன்

**(நெல்லியடி லிபேட்டி மோட்டோ ஹவுஸ் - உரிமையாளர்)**

பத்மநாதன் என்ற பரந்தாமன் பெயரோடு
பாரினில் பிறப்பெடுத்து பண்புடன் உயர்ந்தவரே
பரந்தாமன் அடியினையே இறுகப் பற்றி
வலம் வந்தீர் மாயவன் சந்நிதியை ஞாயிற்றுக்கிழமைதனில்
அமைதியான புன்முறுவல் தவழும் மலர் முகமும்
அன்பாகப் பிறரோடு அளவளாவும் பண்பும்.
ஆண்டவன் உமக்களித்த அழியா வரமன்றோ
நெல்லியம் பதியினிலே தன்னிகரற்றுத் திகழும்
லிபேட்டி மோட்டோ ஹவுஸின் உரிமையாளராய்.
கம்பீரமாய் வீற்றிருக்கும் அழகுக் கோலமும்
கச்சிதமாய் வியாபாரம் செய்யும் பாங்கும்
கண்முன்னே நிழலாட கலங்குகிறோம் அப்பா
ஓராண்டு சென்றாலும் அழியாது உங்கள் நினைவுகள்.
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகிறோம்

**கணையன் தோட்டம்,**
**புலோலிகிழக்கு, பருத்தித்துறை.**

(CS/29633) J-1

**குடும்பத்தினர்**

## இருபத்திரண்டாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில் 20 . 05 . 1927

ஆண்டவர் பாதம் 24 . 04 . 2003



### அமரர் தொம்மை பிலிப்பு

**(அண்ணாவியார்)**

ஆண்டு இருபத்திரண்டு சென்றதுவோ
எம் அன்பு நிறை தந்தையே
நின் அன்பான வதனம் கண்டு
நின் அன்பான ஆழமான வார்த்தைகளால்
நாம் தாழ்ச்சி நிறை பண்பில் வளரவும்,
எமது கடந்தகால நிலையை எண்ணி
எளிமையான வாழ்வு வாழவும்
நீர் எமக்கு கற்பித்தீரே
உமது நேரிய வழிநடத்துதல்
உமது உழைப்பு என்பனவற்றால்
நாம் உயர்வடைய வழிவகுத்தீர்
இவற்றையெல்லாம் நாம் நன்றி
பொங்கும் மனதுடனே நினைக்கின்றோம்.
இந்நாளில் நின் ஆன்மா இறைவனில்
அமைதிபெற இறையருள் வேண்டுகின்றோம்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

(CS/58044) J-1

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## அழகரத்தினம் விஜயராஜன்



சிவன்கோவிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் விஜயராஜன் அவர்கள் கடந்த (21.04.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-மகேஸ்வரி தம்பதியின் பாசமிகு மருமகனும் தெய்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும், சஜந்தா, பாலசயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரசன்னரூபன், பாரதி ஆகியோரின் மாமனாரும் கிருஷ்ணராஜன், புஷ்பலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்பு மருமகனும் மதிவதனி, சதானந்தன் நல்லநாதன், சிவநேசன், கேதீஸ்வரி, சோதிநாதன், கிருபாகரன், பத்மலோசினி, தெய்வராணி ஆகியோரின் மைத்துனரும் நிவேஸ்கன், ஜசானியா ஆகியோரின் பேரனும் இராமதாசன், சாயுச்சியபதி, குகதாஸ், ரகுதாஸ், ராகவதாஸ், குரபரன்தாஸ், தயாபதி, அமராபதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 27.01.1960 **மறைவு** 21.04.2025

**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்**
44 7916 152814 - பாலசயந்தன்
44 7941 969175 - கிருஷ்ணராஜன் (சிறீ)
44 7949 997007 -புஷ்பலதா
077 484 3386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

இருபாலை கிழக்கு கோப்பாய் மானம்புலம் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு அனுக்ஞை கணபதி ஓமம் பிரவேசபலி, வாஸ்துசாந்தி ஏனைய 11 நாள்களும் மாலை 5.30மணிக்கு அபிஷேகம் விசேட பூஜை, மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, மாலை 7மணிக்கு சுவாமி வீதியுலா என்பன இடம்பெறவுள்ளன. எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7மணிமுதல் சங்காபிஷேகம், திருவூஞ்சல் உற்சவம் என்பன நடைபெற்று மதியம் மகேஸ்வரப் பூஜை இடம்பெறவுள்ளது.

(சு–41)

## 31 நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



**26.03.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

## அமரர் ஏரம்பு தெட்சணாமூர்த்தி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.04.2025 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற்று தொடர்ந்து இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் (இல.63, கல்லூரி வீதி, நீராவியடி) நடைபெறும்.


அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 06 . 1950



மறைவு
19 . 04 . 2025

### திரு. சீனிவாசகம் சோதிநாதன்

இணுவிலை பிறப்பிடமாகவும், ஜேர்மனி சோஸ்ற்ரை (Soest) வசிப்பிடாமாகவும் கொண்ட திரு சீனிவாசகம் சோதிநாதன் அவர்கள் கடந்த (19.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சீனிவாசகம் - தெய்வானைப்பிள்ளைதம்பதியரின் மகனும், வேலாயுதபிள்ளை தவமணியின் (ஏழாலை தெற்கு) மருமகனும், ராகினி தேவியின் அன்பு கணவரும், சுதாகினி, நிஜந்தினி, சிறீனிவாசனின் அன்பு தந்தையாரும், அருள்வரதன், சாஜினியின் மாமனாரும், நிலக்ஷனா, கீறித்திகா, திறிசியா, லியோனா இசை ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, குமாரகுலசிங்கம், மற்றும் சந்திரவதனி, காலஞ்சென்ற சுகிர்தாம்பிகை, சகுந்தலாதேவி, கமலநாயகி, ரவீந்திரநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைகிரிகைகள் Soest, Germany யில் நாளை (25.04.2025) வெள்ளிக்கிழமை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
ராகினி (மனைவி) : 00 49 1735633907
சிறீனிவாசன் (மகன்) : 0041 782180005
அருள்வரதன் (மருமகன்): 00 49 176 64914397
சுசீலாதேவி (மைத்துனி- ஏழாலை தெற்கு) : 00 94 771629930
ஜெயகாந்தன் (மருமகன்): 0094 774431851

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/3019) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 . 04 . 1964



விண்ணில்
04 . 05 . 2024

### சத்தியலோஜினி ஜெயந்திக்குமார்

**(ஓய்வு நிலை ஆசிரியர், யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை)**

**திதி: சித்திரை கிருஷ்ணபட்ச (தேய்பிறை) ஏகாதசி**

எங்கள் குடும்பக் குலவிளக்காய்
அன்புள்ள தாயாய் திகழ்ந்த நீங்கள்
எம்மை விட்டு இறையடி இணைந்து
ஆண்டு ஒன்று ஆனதம்மா...
காலங்கள் சென்றாலும், கண்ணுறங்கும்
வேளையிலும் உங்கள் நினைவாக வாடும்
குடும்பத்தினர் ....
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி... சாந்தி... சாந்தி...

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(CR/44831) J-1

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### சகுந்தலாதேவி தனபாலசிங்கம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சகுந்தலாதேவி தனபாலசிங்கம் அவர்கள் 23.04.2025 அன்று புதன்கிழமை நல்லூரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை- சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து- செல்லக்கண்ணுவின் மருமகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராஜலட்சுமி (வரதா) காலஞ்சென்ற மனோபாலசிங்கம் (மதி) இராஜேஸ்வரி மற்றும் செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் செல்வதேவி, இந்திராதேவி (ஈஸ்வரி), விஜயாதேவி (விஜயா) கனடா, விஜயரெட்ணம் (விஜயன்) - வவுனியா ஆகியோரின் சகோதரியும் அகல்யா (வாணி)- (சுவிஸ்), சதீஸ்குமார் (சதீஸ்)- கொழும்பு ஆகியோரின் பாசமிகு தாயாரும் செண்பகவரதன் (வரதன்) சுவிஸ், சுதர்ஷினி (சொச்சி) கொழும்பு ஆகியோரினது மாமியாரும் வைஷ்ணவி (சுவிஸ்), ஆதவன் (சுவிஸ்), சபரீஷ் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (24.04.2025) மாலை 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மாலை 4 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**பிரிவால் வாடும் பிள்ளைகள்**
**மகள் - வாணி**
**மகன் - சதீஸ்**
**தொடர்புகளுக்கு: 0777453540**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய திருத்தந்தை தெரிவில் வத்திக்கான் நடைமுறைகள்!

## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.24

புதிய திருத்தந்தையைத் தெரிவுசெய்வதற்கான வத்திக்கானின் நடைமுறைகள் குறித்து, யாழ் .மறைமாவட்டக் குருமுதல்வர், அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது திருத்தந்தை இறைவனடி சேர்ந்துள்ள நிலையில் எதிர்வரும் நாள்கள் திருச்சபைக்கு துக்க நாள்களாக இருக்கும். குறிப்பாக ஏழு நாள்களுக்குப் பின்னர் அவரது மரணச் சடங்கு நடைபெறும். மரணச்சடங்கு முடிந்தபின்னர் புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள். புதிய திருத்தந்தையைத் தெரிவுசெய்வதற்கு 80 வயதுக்குட்பட்ட கர்தினால்கள் அனைவரும் வாக்களிக்கும் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அதனடிப்படையில் 120 பேர் குறித்த வாக்கெடுப்பில் பங்குபற்றுவர். புதிய திருத்தந்தை மூன்றுக்கு இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று தெரிவுசெய்யப்படுவார்.

குறித்த தெரிவு நிறைவடைந்தவுடன் மக்களுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்த இரண்டு மாதத்துக்குள் மேற்கொள்ளப்படும் என வத்திக்கான் அறிவித்துள்ளது - என்றார். (ச-125)

# குருபூஜை

யாழ்ப்பாணம், ஏப்.24

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 75ஆவது மகாசமாதி குருபூஜை தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளது. அன்றையதினம் பூஜைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ச-41)

### தபால்மூல...

யடைந்துள்ளன. இன்றும், நாளையும் இந்த வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. இந்த வாய்ப்பைத் தவறவிடுபவர்கள் எதிர்வரும் 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் தமது வாக்குகளைப் பதிவு செய்யமுடியும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### வடக்கு...


துள்ளனர். இதன்படி, வவுனியா மாவட்டத்தில் 26 தேர்தல் முறைப்பாடுகள் பதிவுசெய்யபட்டுள்ளன என்று வவுனியா தேர்தல் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அமல்ராஜும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 52 தேர்தல் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் சிவராஜனும், மன்னார் மாவட்டத்தில் 10 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கனகேஸ்வரனும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரை 15 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களத்தின் முறைப்பாட்டு பிரிவு பொறுப்பு அதிகாரியும் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

### டான்...

யின் முக்கியஸ்தரும் மஹிந்த ராஜபக்சவின் பேச்சாளருமான மனோஜ் கமகே மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெறும் கொலைகள் பாதாள குழுக்கள்மீது போடப்பட்டுவருகின்றன. எனவே, டான் பிரியசாத் பாதாள குழு உறுப்பினர் அல்லர். கொலைகாரனும் அல்லர். குடு வியாபாரத்திலும் ஈடுபடவில்லை. சிங்கள, பௌத்த மக்களின் உரிமைக்காக முன்னின்று குரல்கொடுத்த இளைஞன். அவரைக்கொல்ல வேண்டியதேவைப் பாடு பாதாளக்குழுவுக்குக் கிடையாது. ஆகவே அவரின் மரணத்துக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். டான் பிரியசாத்தின் மரணம் மட்டும் அல்ல நாட்டில் இடம்பெறும் கொலைகளுக்கும் பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (அ-ம-44)

## கண்ணீர் அஞ்சலி



நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழாவிற்கு இருபத்தைந்து வருடங்களாக மின்னொளி வழங்கிய மனோ லைற் உரிமையாளர்

**இ.மனோகரன்**

இறைபதம் அடைந்தார்.
எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கிறோம்

**கப்பல் திருவிழா உபயகாரர்கள்.**
**பூர்வீக நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 04 . 1952



இறப்பு 23 . 04 . 2025

## தேவராசா தேவமணி

விஸ்வகுல ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா தேவமணி நேற்று (2025.04.23) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சத்தியதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும் தேவராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்- யாழ்.பரியோவன் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் பகீரதன் (பிரதி அதிபர்- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), காலஞ்சென்ற பகீரதி மற்றும் பரணீதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்- கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), பிரியதர்சினி (முகாமைத்துவ உத்தியோகத்தர்- நகரசபை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வித்தியா (ஆசிரியர்- யா/ வல்வை A.M.T.M.S), யசோதரன் (ஆசிரியர்), வானதி (ஆசிரியர்- யா/ காரைநகர் இந்துக் கல்லூரி), மயூரன் (முகாமையாளர்- Soft Logic Life insurance, Jaffna) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராதாமணி, சரவணபவன், சண்முகதாசன், சிவபாலன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜிந், ஹரணி, பிரியங்கா, கீர்த்தி, கார்த்திகன், ஆர்த்திகன், அபிராம், அனிருத், ஆரதி, அக் ஷயா, அத்மிகா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விஸ்வகுல ஒழுங்கை,**
**புலோலி வடக்கு,**
**பருத்தித்துறை**

**தகவல் : குடும்பத்தினர்**
**0774319782**
**0776681547**
**077 8694243**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 01 1950



மறைவு 23 04 2025

## கணபதிமுத்து டோனேசன்

(க.டோனேசன் அன்ட் பிறதேர்ஸ் 'வியாபார நிலைய உரிமையாளர்')

வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் முருங்கன் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிமுத்து டோனேசன் அவர்கள் நேற்று (23.04.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிமுத்து - ஜெயம் தம்பதியினரின் பாசமிகு மகனும், ஜெயஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான எதிர்வீரசிங்கம் - சிவகாமசுந்தரி தம்பதியினரின் அன்பு மருமகனும், கௌரிப் பிரியன் (வைத்தியர் - UK) அவர்களின் அன்புத் தந்தையாரும், பிரகேஸ்வரி, விஜயலட்சுமி, சத்தியசீலன், காலஞ்சென்ற வசந்தா மற்றும் ஜெயராணி, ஜெயசீலன் (உரிமையாளர் ஜெயலங்கா என்ரர் பிறைஸ் - முருங்கன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (24.04.2025) நண்பகல் 12 மணிக்கு அவரது வட்டுக்கோட்டை இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் குடும்பத்தினர்** **077 351 2813** **வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வீண் செலவுகளும் ஏற்படும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும். அம்பிகையை வழிபடுவது நன்று.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். இன்று ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று.

**துலாம்:** திலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனஸ்தாபம் நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அலைச்சல் ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வழக்கமான பணிகளில் பொறுமையுடன் செயற்படவும். இன்று துர்கையை வழிபடுவது நன்று.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும். காரியம் இழுபறியாகி முடியும். வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

## மாணவனை...

றுள்ளது. 11 வயது மாணவன் ஒருவனே விபத்தில் இவ்வாறு படுகாயமடைந்துள்ளான். விபத்தை ஏற்படுத்திய பெண் தப்பிச்சென்ற நிலையில், கைமுறிந்து படுகாயங்களுடன் கிடந்த அந்த மாணவன், சக மாணவர்களால் மீட்கப்பட்டு, பாடசாலை நிர்வாகத்தின் ஊடாக உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

பாடசாலை ஆரம்பிக்கும்போதும், நிறைவுறும்போதும் பொலிஸார் வீதிக்கடமையில் ஈடுபடுவது வழமையாக உள்ளபோதிலும், அண்மைய நாள்களாக அந்தச் செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை என்று மாணவர்களும் பொதுமக்களும் குற்றஞ்சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-27)

## செம்மணி...

செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேசசபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன. இதனால், அந்தப் பகுதி மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இதற்கான நிதி அரசாங்கத்தால் விடுவிக்கப்படவில்லை. இதனால், அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாகத் தாமதமாகிவந்தன. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தரப்பினர், நிதியை விடுவிப்பதற்கு தாமதமாகின்றமை தொடர்பில் கடும் விமர்சனத்தை முன்வைத்ததைத் தொடர்ந்து, தற்போது அந்த நிதியை நிதியமைச்சு விடுவித்துள்ளது. இதனால், விரைவில் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**வழக்கு**

**யாழ்ப்பாணம் செம்மணியில் மீட்கப்பட்ட மண்டையோடு உள்ளிட்ட மனிதச் சிதிலங்கள் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலைசெய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளதாக, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினரும், சிந்துபாத்தி மயான நிர்வாகசபை உறுப்பினருமான வை.கிருபாகரனால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு** வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## அமைச்சர்...

ளார். பரப்புரைகள் மற்றும் அரசாங்கத்தால் ஏற்கனவே ஆரம்பித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பரிசீலனையில் ஈடுபடுவதற்காகவே, அமைச்சர் பிமல் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## 8 கிலோ...

மீட்கப்பட்டுள்ளன. கட்டுமரம் ஒன்றில் இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்குத் தங்கம் கடத்தப்படுவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமையவே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. (அ-ச-60)

## மூளையில்...

(வயது-34) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்துள்ளார்.

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக அவர் பருத்தித்துறை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ள நிலையிலேயே உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையில் மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று அறிக்கையிடப்பட்டள்ளது.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-ம-100)

## ராமர்பால...

கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, இந்த விடயம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

ராமர்பாலம் என்று அழைக்கப்படும் பகுதியின், மணற்திட்டுக்கள் வரை சுற்றுலாவிகள் செல்வதற்கு நீண்டகாலமாக பரிசீலிக்கப்பட்டு வந்தது. தற்போது உறுதியான முடிவுகள் எடுக்கப்பட்டு, மே மாதம் 15ஆம் திகதிமுதல் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். பாதுகாப்பு ஏற்பாடுகள், பயணிகளின் எண்ணிக்கை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் கடற்படையினரிடம் இருந்து அறிக்கையொன்றும் கோரப்பட்டுள்ளது - என்றார்.

கலந்துரையாடலில் வட மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பத்திநாதன், மன்னார் மாவட்டவன உயிரிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம். கீர்த்தி சந்திரரத்ன, பிரதேச செயலாளர், முப்படையினர், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அ-ம-125-213-60-56)

## வட்டுவாகல்...

அனைத்து வேலைகளும் நிறைவடைந்துள்ள நிலையில், எதிர்வரும் ஜுன் மாதமளவில் ஒப்பந்தகாரர்களுக்கான கோரல் விடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதஅளவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 2026ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த வேலைத்திட்டத்தை முடிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அகலிக்கப்படவுள்ள பாலம் கலைநயம் மிக்கதாகவும், கலாசார விழுமியங்களை உள்ளடக்கியதாகவும், பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கியதாகவும், கடற்றொழிலை மையமாகக் கொண்ட தொழிலாளர்கள் அவர்களின் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய இடமாகவும் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் சுனில் ரத்நாயக்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மற்றும் திணைக்கள அதிகரிகள் ஆகியோர் களவிஜயம் மேற்கொண்டு வட்டுவாகல் பாலப் புனரமைப்புக்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துவைத்தனர். (அ-எ-19)

## தபால்...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இரவு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 243 வட்டாரங்களில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் மாநகரசபை, மூன்று நகரசபைகள், 13 பிரதேசசபைகள் என்பனவே அவற்றில் அடங்குகின்றன. இந்தத் தேர்தலுக்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயாராகிவருகின்றன. ஒட்டுமொத்த வாக்காளர் எண்ணிக்கையாக 4 லட்சத்து 98 ஆயிரத்து 140 பேர் காணப்படுகின்றனர்.

தபால்மூல வாக்களிப்பைப் பொறுத்தவரை 292 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 28 வலயங்கள் தெரிவுசெய்யபட்டு பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## இணையக்...

தொடர்ச்சியாக அதிகரித்துவந்தன. இதனால், இணையக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகக் கொழும்புக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, யாழ்ப்பாணத்தில் இணையக் குற்ற விசாரணைப் பிரிவு ஆரம்பித்துவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய திருத்தந்தை தெரிவில் வத்திக்கான் நடைமுறைகள்!

## யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.24

புதிய திருத்தந்தையைத் தெரிவுசெய்வதற்கான வத்திக்கானின் நடைமுறைகள் குறித்து, யாழ் .மறைமாவட்டக் குருமுதல்வர், அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது திருத்தந்தை இறைவனடி சேர்ந்துள்ள நிலையில் எதிர்வரும் நாள்கள் திருச்சபைக்கு துக்க நாள்களாக இருக்கும். குறிப்பாக ஏழு நாள்களுக்குப் பின்னர் அவரது மரணச் சடங்கு நடைபெறும். மரணச்சடங்கு முடிந்தபின்னர் புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள்.

புதிய திருத்தந்தையைத் தெரிவுசெய்வதற்கு 80 வயதுக்குட்பட்ட கர்தினால்கள் அனைவரும் வாக்களிக்கும் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அதனடிப்படையில் 120 பேர் குறித்த வாக்கெடுப்பில் பங்குபற்றுவர். புதிய திருத்தந்தை மூன்றுக்கு இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று தெரிவுசெய்யப்படுவார்.

குறித்த தெரிவு நிறைவடைந்தவுடன் மக்களுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்த இரண்டு மாதத்துக்குள் மேற்கொள்ளப்படும் என வத்திக்கான் அறிவித்துள்ளது- என்றார். (ச-125)

# பொருளாதார முகாமைத்துவத்துக்கு விசேட குழுவை அமைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.24

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நடுத்தரக்கால வேலைத் திட்டத்தில் மொத்தத் தேசிய உற்பத்தியின் 5 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது. நிலைபேறான அபிவிருத்தி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை அடைவதற்காக கொள்கை வகுப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்கள்மீது அரசு கவனம்செலுத்தியுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக தனியார் முதலீடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால், எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

வினைத்திறன் மற்றும் தேசிய பொருளாதார நோக்கங்கள் மீது கவனம்செலுத்துவதை உறுதிப்படுத்தி பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைக் கலந்துரையாடல்கள் மேற்பார்வை மற்றும் அவற்றுக்கான வசதிப்படுத்தல்களுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவை நிறுவுவதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

# மூன்று நீதிபதிகள் முன்பு கெஹலியவின் வழக்கு

## சட்டமா அதிபர் கோரிக்கை

கொழும்பு, ஏப்.24

மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை, நிலையான மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டமா அதிபர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தரமற்ற இம்னோகுளோபுலின் மருந்துக் கொள்முதல் மோசடியால் நாட்டுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. பொருளாதார இழப்பு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 2018ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சிறப்புச் சட்டத்தின்கீழ் இந்த வழக்கைச் சிறப்பு வழக்காகக் கருதி, நிலையான மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிமன்றம் முன்பு விசாரணை நடத்த உத்தரவு வழங்க வேண்டும் என்று சட்டமா அதிபர் இந்தக் கடிதத்தில் கோரியுள்ளார்.

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பான குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைதுசெய்யப்பட்டு பொதுச் சொத்துச் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-சி)

**காணி விற்பனைக்கு**

றக்கா வீதியில் பொஸ்கோ
பாடசாலைக்கு 200m தூரத்தில்
2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

**075 711 3052**

(CS/58072) J-1

**காணி விற்பனைக்கு**

கோணாக்கம்பியன்புலம் கைதடி
மானிப்பாய் வீதியில்
கமநல சேவை நிலையத்திற்கு
அருகில் 5 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

**077 636 7354**

(CS/58057) J-1

**வேலையாட்கள் தேவை**

முல்லைத்தீவில் பண்ணையில் தங்கியிருந்து குடும்பமாக
வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.
சம்பளம் ரூபா - Rs 80,000/- , தங்குமிடம் வழங்கப்படும்.

**077 556 5876**

(CS/58073) J-1

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர்
வளமான தென்னைக்கு உகந்த காணி
விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக்
கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
Whatsapp:- **0044 740 537 3526**

(CS/57780) J-1

**Smart science academy**

✦ Lt. T. நாகரத்தினம் ஆசிரியர் ஞாபகார்த்த **இரசாயனவியல் மாதாந்த தொடர் பரீட்சைக்கு** பதிவு செய்த மாணவர்கள் உங்கள் சுட்டிலக்கங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

✦ இரசாயன அலை இல 01 (2027 batch)
26/5/2025 சனிக்கிழமை அன்று நடைபெறும்.

✦ பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மாதந்தோறும் நடைபெறும் **இரசாயனவியல் செய்முறைகளிலும் கலந்து கொள்ளலாம்.** (chemistry practical)

**ஆசிரியர் திரு. s. சுரேஸ்குமார் Bsc (Hons) PGDE**
**154 A navalar Road jaffna,**
**நிரு கல்வி நிலையம் கோண்டாவில்**
**077 555 9028, 077 351 3734**




**யாழ் நகரில் இயங்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை**

1) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
(வாகன சாரதி அனுமதி பத்திரமுடையவர்கள்)
2) பக்க வடிவமைப்பாளர்கள் (Graphic Designer)
(ஆண், பெண் இருபாலாரும் - பகல்/இரவு)
3) வரவேற்பாளர்கள் - (ஆண், பெண் இருபாலாரும்)

ஆர்வமுள்ளவர்கள் 25.04.2025 - வெள்ளிக்கிழமை மற்றும்
26.04.2025 - சனிக்கிழமை ஆகிய திகதிகளில்
நேர்முகத்தேர்வுக்கு நேரில் சமூகமளிக்கவும்.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




Congratulations!

Best Wishes

யா/ காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்
எமது கல்லூரி அதிபர்
**திரு அ. ஜெகதீஸ்வரன்**
**SLPS - I**

அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை ஆணைக்குழுவால் 2021ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 இற்கு பதவியுயர்வு பெற்றமையையும், **உதவி அதிபர் திரு த. ஹென்றி றீகன்** அவர்கள் கல்வி அமைச்சின் செயலாளரால் 2022 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அதிபர் சேவையின் தரம் II இற்கு பதவியுயர்வு பெற்றமையையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **பழைய மாணவர் சங்கம், ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ காரைநகர் இந்துக் கல்லூரி**

(CS/3002) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org